229536

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம்

[1991, மார்ச் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1991. மார்ச் மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.00

## 1991 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம்.

[1991, மாச்சு மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஒ. 34/89

**1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்*

1. இச்சட்டமானது, 1991 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(இ) அவர் எழுபது வயதினை அடைவதன் மேல்."

*கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுதலும், செல்லுபடியுடையதாதலும்*

3. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 1989 ஆகத்து 1 ஆந் தேதியில் வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு, ஆகத்து மாதம் 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிகளின்போது ஒம்புட்சுமான் பதவிக்கான எவரேனும் ஆளின் நியமனம் அல்லது அத்தகைய பதவியில் எவரேனும் ஆள் தொடர்ந்திருத்தல் விடயத்திற்கேற்ப அவ்வாறு நியமிக்கப்பட்ட அல்லது பதவியில் தொடர்ந்திருக்கின்ற அந்த ஆள், மேற்சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் அறுபத்தெட்டு வயதிற்கு மேற்பட்டவராகவிருந்தார் என்ற நிகழ்வு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருந்திருக்கின்றதென அல்லது செல்லுபடியற்றதாகுமென கருதப்படுதலாகாது.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தினால் ஒம்புட்சுமானுக்கு அளிக்கப்பட்ட, அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எதேனும் தத்துவம், கடமை அல்லது பணி பிரயோகிக்கப்படுதலானது, புரியப்படுதலானது அத்துடன் நிறைவேற்றப்படுதலானது, ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு

2— டீ. 07575—1,175 (90/01)

ஆகத்து மாதம் முதலாம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது ஓம்புட்சுமான் பதவி வகிக்கின்ற ஆளினால் அத்தகைய பதவி வகிப்பவர் விடயத்திற்கேற்ப அவ்வாறு பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நேரத்தில் அறுபத்தெட்டு வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் செல்லுபடியற்றதாக விருந்திருக்கின்றதென அல்லது செல்லுபடியற்றதாகுமென கருதப்படுதலாகாது.

ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.